Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ௗு ஐப்பசி-மீ உ ௳ (18—10—34) } No. 47.

## திருமந்திரம்

அண்ண லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணி லிருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவ ரீசன் விழுப்ப முரைத்தன
ரெண்ணிநின் றப்பொரு ளேத்துவ னானே.

பண்டித ராவர் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையு
மண்ட முதலா னரன்சொன்ன வாறே.

புள்ளினு மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கு
முள்ளது சொன்னே முணர்வுடை யோருக்கே.

பிராணன் மனத்தோடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண் டீர்நீரே.

மூலத்து வாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத்து வாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே.

எருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடும் வாச லிருவிரற் கீழே
யுருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் றானே.

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
பவ-ஆண்டு ஐப்பசி-மீ 2உ

## வீடு பெற நில்

இவ் வேத சூத்திரம் ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப்படும் ஔவையார் அருளிய "ஆத்திச் சூடி" என்னும் சூத்திரக் கொத்துள் ஒன்று. குருவருளால் வீட்டு நெறிக்குரிய தடத்தைக் கண்டு அந்நிலையில் வழுவாது நிற்றல் வேண்டும் என்பது இதன் பொருளாகும்.

### பிரம சூத்திரம்.

"அதாதோப்ரஹ்மஜிஜ்ஞாஸா"

(1. 1. 1.)

என்னும் முதற் சூத்திரத்தால் பிரமத்தை அறிய (அடைய) ஆசை (பக்குவம்) வேண்டும் என வியாச முனிவர் அருளியது போல,

"அறஞ்செய விரும்பு"

என்னும் முதற் சூத்திரத்தால் அறம் (பிரமம்) என்னும் சிவத்துவத்தை ஆக்கமுறச் செய்ய விரும்ப (பக்குவம்) வேண்டும் என அருளிய பிராட்டியார் "வீடு பெற நில்" என்னும் இச் சூத்திரத்தால் அத்தகைய விருப்பம் என்னும் பக்குவ மேலீட்டினால் ஆசான் தரிசனம் பெற்று அவனால் அவ் அறநெறியாகிய வீட்டு நெறிக்குரிய கருவியைப் பெற்று அவற்றை மதிவைராக்கியத்தோடு வழுவறத் தாங்கி ஒழுகி அடையவேண்டிய தடத்தைக் (நிலையை) கண்டு அந்நிலையில் நிற்கவேண்டும் என வற்புறுத்தியருளினார் என அறிதல் வேண்டும். இவ் அரிய பெரிய சூத்திரப் பொருளைக் கடைபோக உணர்ந்து விரிவுற விளக்குதல் எம்போலிய சீவர்க்குச் சாலாதாயினும், அஃது ஈண்டு ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படுகின்றது.

### வீடு என்றால் என்னை?

ஒவ்வொருவரும் தாம் தாம் நிலையாக வசிக்கும் இடத்தை வீடு என்பது உலகியல். புறத்தே சென்று வருந்தி முயன்று பொருளீட்டுவோரும் இறுதியில் வீடு செல்ல விழைந்து அதனை அடைந்து சுகமாக வாழுகின்றனர். தமது சுகத்துக்கு ஏற்றவாறு வீட்டை அமைத்துக் கொள்ளுகின்றனர். உலகியலினும் சீவர் யாவருக்கும் துன்பமின்றி இன்புற்று வாழ்தற்குரிய இடமே வீடு எனப்படுதலால், துன்பம் நீங்கி—துன்பம் தரும் தொடர்பு நீங்கி இன்புற்று இருத்தற்கு உரிய இடமே—நிலைக்களமே—பதியே வீடு எனப்படும் என்பது வெள்ளிடை. வீடு என்றால் விட்டது—விடுதலை—பரிநிர்வாணம் எனப் பொருள்படும். துன்பத்தை விட்டதே — துன்பம் தரும் தொடர்புகளை விட்டதே—பாசங்கள் பற்றுக்களாகிய மாயா சம்பந்தம் நீங்கியதே விட்டது என்பதன் பொருளாகும். பரிநிர்வாணம் என்னும் கைவல்லியம் (அதுவாதல்) இதுவே என்க. மாயா சம்பந்தம் அறவே ஒழிந்து தான் அதுவாதலே—சிவமாதலே-சிவாங்கமாதலே வீடு என்க. அறமும் பொருளும் (உடலுயிர்) ஒன்றுதலால் இன்பம் உளதாகும். இம் மூன்றும் கெட்டுத் திரிந்ததே வீடும் ஆகும்.

"இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என ஔவை கூறியதும் அறிக. அறமே வீடாயிற்று என்க. அறம், பிரமம், சிவம், பதி, இடம், முதல் வீடு என்பன ஒன்றே என்க. மாயா காரியமாகிய அசுத்த தநுவே குருநெறி கடைப்பிடித்து வீடு பெற நிற்றலாகிய வாய்மையான அறத்தாற்றினால் விமலமாய் அமலமாய் அருள் வடிவாய் நித்தியமாகிய வீடு ஆகும் என்க.

"முத்திமுதல் முப்பத்தாறே"
(திருமந்திரம் 1-ம் தந் உபதேசம் செ 13)

என எம் அண்ணல் அருளியதும் அறிக.

### திருவாய்மொழி

"......அடியோங்கள்அடிக்குடில் வீடு
பெற்று உய்ந்தது காண்..........."

"நன்றாய் ஞானங் கடந்து போய் நல்லிந்
[திரியமெல்லா மீர்த்
தொன்றாய்க் கிடந்த வரும் பெரும் பாழ
[லப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்
[களைந்து பசையற்றால்
அன்றே யப்போதே வீடதுவே வீடு
[வீடாமே.

"அதுவே வீடு வீடு பேற்றின் பந்தானு
[மது தேறி
எதுவேதானும்பற்றின்றியாது மிலிகளா
[கிற்கில்
அதுவே வீடு வீடு பெற்றின்பந்தானும்
[மதுதேறா
தெதுவே வீடேதின்ப மென்றெய்த்தா
ரெய்த்தார் எய்த்தாரே."

குருவருளால் சாதக யோகங்களை வழுவற அநுட்டித்து வீட்டு நெறிக்குரிய தடத்தைக் கண்டு (அமலப்படி) அவரோகணம் பெறாது அதன் கண் உறைத்து நின்று படியேற்றம் பெற்று அநுபவமேலீட்டினால் உலகோர் அறிந்து உய்யும் வண்ணம் இவ்வாறு வீட்டின் இலக்கணத்தை அருளிச்செய்த தத்துவப் பெரியாராகிய ஆழ்வார் பெருமக்கள் தமது உடலுயிரை அமலமாக்கிச் சிதாகாசப்பெருவெளியில் மறைந்தமையானும் அன்னார் அருளிய வீட்டின் இலக்கணம் இன்னது என்பது வெள்ளிடை மலையாம். தூல சூக்குமங்களை விமலமாய் அமலமாய் அருள் வடிவாய் மாற்றுவதே—வீடாக்குவதே "வீடு பெற நிற்"கும் மெய்யடியார்க்குரிய ஒழுக்கம் என அறிக. உலகியலிலும் முன்னிலையாகிய வீடு என்பது சரீரம் என்னும் வாய்மையான வீட்டை ஆக்கமுறச் செய்தற்கு ஏற்ற இல்லற வாழ்விற்கே உரியதாகி அமைந்துள்ளது. இல்லற வாழ்விற்கு இன்றியமையாத் துணையாகிய மனைவி என்பவளும் வாய்மையான மனை (வீடு) என்னும் சரீரத்தை அழகு படுத்தற்கே — விமலமாக்குதற்கே இயற்கை முறையான் அமையப்பெற்றவள் ஆவள். (மனை—வீடு — சரீரம், வி—அழகு—அழகு செய்தல்) அழகு என்பது ஈண்டு அமல ஒளியின் ஆக்கத்தைக் குறித்தது.

## திருமந்திரம்

"பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
.........................................."

என எம் அண்ணல் அருளியதும் அறிக.

சரீரமே நிலைக்களமாகிய பதி—வாய்மையான வீடு என்பது,

"பதியாய் இருந்த தேகப் பவுரி குலையா
[மாலே"

(சித்தர் கணம். செ. 4.)

என இவ்வுண்மையை ஒருவாறு அறிந்த நமது தாயுமானவர் கூற்றாலும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. தூல சரீரமாகிய இவ் உடம்பே முத்தியடைதற்கு இன்றியமையாச் சாதனம் என்பதும் இத்தூலத்தில் அபேதமாகக் கலந்திருக்கும் சூக்குமம் விளைவேற்றற்பாலது என்பதும் இதுவே வீடு பெறநிற்றற் குரிய தவத்தின் முதற்படி என்பதும் பிரபல சுருதியாகிய சாந்தோக்கியத்தாலும் நன்று வலியுறுத்தப்பட்டது. (வித்தகம் இல 45 இல் "தூலசூக்கும சம்பந்தம்" என்னும் கட்டுரையை நோக்குக.) சாந்தோக்கியம் சாமவேத உபநிடதம் என்ப. சாந்தோகர் . சாமவேதிகள் எனப்படுவர். அறுசுவை அன்னம் (அருந்தல் பொருந்தல்) தூல சூக்கும உய்வுக்கு இன்றியமையாதது எனவும் சகல போகங்களுக்கும் ஆதாரம் அன்னமே எனவும் இருக்கு வேதம் முறையிடுகின்றது. தூல சரீரம் அன்னமயகோசம் எனப்படுதலும் அறிக. இவ்வாறு நிறை முறையான அருந்தல் பொருந்தல்களானும் சூக்குமமான பயில்வுகள் பலவற்றாலும் மருளுடம்பாகிய அசுத்த தநுவை அசுத்த நிறை நீக்கி விமலமாய் அமலமாய் அருள்வடிவான வீடாக்கவேண்டும். தூலம் எவ்வாறு அருவாய் மறைந்து வீடாகும் என்பது வித்தகம் இல 45 6 இல் ஒரு சிறிது கூறப்பட்டது. ஆங்குக்காண்க.

## குறள்

புக்கில் அமைந்தின்று கொல்லோ
(உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு.

(ஷை 34ம் அதி, நிலையாமை செ. 10)

என்னும் செய்யுளால் சாக்காட்டை விளைக்கும் பிணிகளுக்கு இடமாகிய அசுத்த சரீரங்கள்தோறும் பூரணமாகக் குடியிருக்க முடியாது ஒதுங்கியிருந்துப் போந்த உயிருக்கு ஒழிவற ஒன்றி—பூரணமாய்க் குடிபுகுந்து நித்தியமாய் இருத்தற்குரிய அமலதநுவாகிய வாய்மையான வீடு இன்னும் அமையப்பெறவில்லையே எனத்தேவர் இரங்கியவாற்றால் தனக்கு உரிமையான அமல தநு அமையப் பெற்றால் உயிர் அதனைவிட்டுப் பிரியாது நித்தியத்துவம் பெறும் என வாய்மையான வீடு கூறப்பட்டமை கண்டு கொள்க. ஊனம் அறவே ஒழியப்பெற்ற இவ் வடிவமே எம்பெருமான் பூரணமாகக் குடிபுகப்பெற்ற வீடு என்க.

## திருவிசைப்பா

"..............................அடியேன்
வினைபடுடல் நீ புகுந்து நின்றமையால்
[விழுமிய விமானமாயினதே"

(ஷை முகத்தலை செ—6)

எனக்கருவூரார் அருளியதும் அறிக. அசுத்த தநுவைக் குருவருளால் பெறப்படும் நிறை முறையான ஒழுக்கங்களால் அழிந்துபடாது நித்தியத்துவம் அடையச்செய்தலே வீடுபெற நிற்றலாகிய வீடாக்கும் பெற்றி என்க. "இடம்படவீடெடேல்" என ஔவையார் அருளியதும் அறிக. இதன் விளக்கமான பொருளை "வித்தகம்" இல 21 இல் காண்க. வீடு ஆக்கமுறுதல்—கட்டப்படுதல் எவ்வாறு? அருளே வீடு ஆதலால் "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய அருள் விளைவேற்றப்படவேண்டும். அருளின் பண்பும் அஃது ஆக்கமுறும் வகையும் 'வித்தகம்' இல 35 இல் கூறப்பட்டன. ஆங்குக்காண்க. இவ்வீடே முத்தி எனப்படுவது. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அமலமடைந்து சூக்குமமாய் அருளாய் சிதாகாசத்தில் மறைவதே உண்மைச் சைவமுத்தி நிலை என்பது இதுவரை "வித்தக" வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றால் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு நன்று வலியுறுத்தி நிலைநாட்டப்பட்டது. இத்தகைய வீடு ஆக்கமுறும் பெற்றி முத்தி என்னும் சொல்லின் உண்மைப்பொருளை ஈண்டு விளக்குமுகத்தால் ஒரு சிறிது கூறப்படுகின்றது.

## அப்பர் தேவாரம்

"..........................................
முத்தியை முற்ற வைத்தார் முறை
[முறை நெறிகள் வைத்தார்
.........................................."

"முத்தியை முற்ற வைத்தார்" என்பதனால் அது படிமுறையான் ஆக்கமுற்றுப் பூரணப்படும் என்பதும், அதுவே இம்மாயாப் பிரபஞ்சத்தில் மீண்டு வாரா நெறி என்பதும், அஃது ஒன்றே என்பதும் நன்று பெறப்படுகின்றன. "முறை முறை நெறிகள் வைத்தார்" என்பது அம்முத்தி நெறிக்குரிய சாதகயோகங்கள் சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ப வெவ்வேறாய் அளவில்லாதனவாகும் என்பதனையும் அவற்றை அருளும் இறைவன் மாண்பையும் உணர்த்தி நின்றது.

"ஆட்பாலவருக்கு அருளும் வண்ணமும் [ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை கிளக்க [வேண்டா......"

என ஞானசம்பந்தப்பெருமான் அருளியதும் அறிக. முத்தி என்பதன் பொருள் என்னை? அஃது ஆக்க முற்றுப் பூரணப்படுதல் எவ்வாறு? எனின் சிறிது கூறுதும்:—

உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுதலே முத்தி ஆக்கமுறுதல் என்பது உடலுக்கு மெய் என்னும் பெயர் பிரசித்தியாக வழங்குகின்றது. மெய் என்ற போதே உயிரோடு கூடியதென்பது வெள்ளிடையாம். உயிர் இல்லாமல் மெய் இல்லை. மெய்யில்லாமல் உயிர் இல்லை. உயிரோடு கூடியதே மெய் எனப்படுவது. உயிர் பிரியாது நிலைத்த சரீரமே உடல் எனப்படுவது. உடல் என்றால் பொன் எனப் பொருள்படும். "நிலையாப் பொருளை உடலாக் கருதி" என்னும் திருப்புகழ்ச் செய்யுட்பாகத்தில் உடல் பொன் எனப் பொருள் படுதல் கண்டு கொள்க. பொன் என்றால் தாது என்பர். அதுவே இந்திரியம். இந்திரியம் அசுத்தம் நீங்கப் பெற்ற சரீரமே—அதன் கண் உள்ள நாலு கலைகளுள் இரண்டு கலைகள் தன்னகத்து உறையப்பெற்ற சரீரமே உடல் எனப்படுதற்கு உரியது என்க. இது தான் ரக்ஷகதேகம்— விமல தேகம்— விதேகம்—இடபதேகம்—மாடு தேகம் பொன் மயமான தேகம். (மாடு என்றால் பொன் என்பர்.) மெய் என்ற போதே உயிர் இருக்கிறது. உயிராகிய இயக்கம் இருக்கிறது. இவ் இயக்கத்தைத்தான் சத்தொலி என்பர் வித்தகர். மலர்ந்தபோது — பூத்த போது சித்தொலியின் விளக்கம் உண்டு. ஆதலால் சத்தொலி சித்தொலி என இரண்டாகப் பேசப்படும். சத்தொலி என்றால் சத்துயிர். இது தான் மகரத்தினிடத்தில் தொனிப்பது. "ம்" என்பதில் இகரம் தொனிக்கின்றது. இது ("ம") எனப் பூத்தபோது — காரியப்பட்டபோது அகரம் தொனித்து "மா" என விரிகின்றது—விசர்க்கம் பெற்றுக் காரியத்தில் காரியப்படுகின்றது. இது தான் சித்தொலி. சித்தொலி என்றால் சித்துயிர். இகரம் அகரம் என்னும் இரண்டும் சித்தொலி சத்தொலிகளாய் நிற்கின்றன. இவையே அன்னையும் பிதாவுமாம். ஈன்றோர்க்கே "ஆயி" (அ + இ) என்னும் பெயரும் வழங்குகின்றது. சத்தி சிவம் இரண்டு. வியாபகத்தில் இரண்டு எனப்படும். வியாப்பியமாகிய ஒடுக்கத்தில் ஒன்று எனப்படும். அஃதாவது "ம்" என்னும் ஒலி ஒன்றேயாம். அம்மகர ஒத்தில் இகர உயிர் தொனிக்காமல் தொனிக்கும். சத்தி சிவம் பிரிபடாதது என்பதும் இது. தாமத இயக்கமுடையது மெய் எனப்படும். அதிக நிறை கொண்ட இயக்கம் உயிர் எனப்படும். இயக்கம் என்பதில் இரண்டு இருக்கின்றன. இயக்கம் அசைவு எனப்படும். அசைவு என்பதில் ஒலி உண்டு. அசைவால் உண்டானது ஒலி. அசைவில் ஒலி அடங்கியுள்ளது. இரண்டில்லாமல் ஒலி இல்லை. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று அதிக மாத்திரை பெறுவதே விரிந்தது-தூலித்தது என்பது. இதனால் இரண்டு என்பது தெரிந்தது. சமரச நிறைபெற்றால் இரண்டும் இல்லை, இரண்டும் உண்டு. இரண்டும் ஒன்றுபட்டது. ஒன்றுபட்டது என்பதனால் இரண்டாய் இருந்தது தெரிந்தது. விரிந்தது ஒன்றாய் நின்றால் அவ்வாறு நிற்றல்—சேர்தல் என்பதனால் மூன்றாது உண்டானது. இது தான் மூன்று அசைவான தீ. சத்தசைவான தீ சித்தசைவான தீ என்னும் இந்த இரண்டு அசைவான தீயும் ஒன்று சேருமிடத்து—சமநிறை பெறுமிடத்து அவ்வாறு சமநிறை பெறுவதென்பதும் ஒரு அசைவு ஆதலால்-நிறை கொண்ட அசைவு ஆதலால் அதுவும் ஒரு தீ (அக்கினி) எனப்படும்—உஷ்ணம் எனப்படும். சமரசமானதால் இரண்டும் இல்லை; இரண்டும் உண்டு; இரண்டும் கெட்டது. கெட்டபோது அஃதாவது இரண்டனுடைய செயல் என்னும் இயக்கம் சமரசப்பட்டபோது—நிறை பேதிக்காமல் ஒன்றியபோது அவ்வொன்றுதல் என்பதிலேயே மூன்றாவது ஒன்று ஆக்கமுறுகின்றது என்க. இவ்வாறு ஆக்கமுற்ற "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய இதுதான்—இந்தச் சோதி தான் மூன்றாவது தீ மூன்று தீ—முத்தீ—முத்தி எனப்படுவது என்க. இவ்வாறு மூன்றாவது தீ ஆகிய முத்தீ ஆக்கமுற்றுப் பூரணப்பட்டபோது சத்துச் சித்தாகிய இவ் உடலம் ஊனம் அறவே ஒழிந்து அருவமான அருட்பெருஞ் சோதியோடு ஒன்றாய் நின்றிடும் என்க. இதனைத் தான் வேதாகம புராண இதிகாசங்கள் 'ஜோதி' "ஜோதி" என ஒலமிடுவனவாகும். ஆதலால் முத்தீ ஆக்கமுறப் பெற்ற வாய்மையான வீடாகிய அமல உடலம், அஃது ஒரு சிறிதும் ஆக்க முறப் பெறாத மருளுடம்புகள் போலப் பிணமாகி விழும் என்று நினைக்கவும் சொல்லவும் படுமா? ஊனம் அறவே ஒழிந்த இவ் உடல் கற்பூர வண்ணமாய் அள்ளூறுக்கையாய் அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைந்து விடும்— ஞானாகாசத்தில் ஒடுங்கிவிடும் என்க. வேத உண்மை இதுவே என அறிதற் பாற்று. மேலே கூறப்பட்டதே "முத்தி" என்னும் சொல்லின் உண்

மைப் பொருள் என்பது நன்று கடைபிடிக்க. அப்பும் உப்பும் சமநிலை கொள்ளுதலால் முப்பு—முப்பூ விளைதல்—முப்பூ முடித்தல் என்னும் சித்தர் பரிபாஷையின் உண்மைப் பொருளும் இதுவே என அறிதற்பாற்று. "பூவல்லி கொய்யாமோ" என மணிவாசக சுருதி கூறியதன் உண்மையும் இது. இவ்வுண்மை அறியாதார் "முப்பு முடிக்கின்றோம்" என்று சில மருந்துகளை உளுற்றி உலக மாக்களை ஏமாற்றிவிடுவார். முத்தி என்பதற்கு யாவற்றையும் விடுதல் எனக் கூறப்படும் பொருளும் மேலே கூறிய உண்மைப் பொருளுக்கு அங்கமாகி அதனுள் அடங்குதல் அறிக. உண்மைப் பொருள் காணாத விடத்து உண்மை நன்று புலப்படமாட்டாது. இதனாற்றான் பலர் முத்தியின் இலக்கணத்தைப் பூரணமாய் அறிய முடியாது மரணமே முத்தி என அமைய வேண்டியவராயினர். அருட் பெருஞ் சோதியாகிய முத்தீ ஆக்க முற்றுப் பூரணப் படுதலால் மாயா சம்பந்தமாகிய ஊனம் அறவே ஒழிந்து அமலமாதலே—அமலமாக மாற்றமடைதலே யாவற்றையும் விடுதலும் ஆம். இதுவே வாய்மையான நிர்வாணம் — பரிநிர்வாணமும் ஆம் என அறிதற்பாற்று.

## திருமந்திரம்

இரும்பிடை நீரென வென்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
யுரம்பெற முப்பா மொளியை விழுங்கி
யிருந்தவென் னந்தி யிதயத்து ளானே.

கரியுண் விளவின் கனிபோ லுயிரு
முரிய பரமுமுன் னோதுஞ் சிவமு
மரிய துரியமே லகிலமு மெல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே.

(ஷை 8-ம் தந்-விசுவக்கிராசம் செ. 6, 7.)

கற்பூரவண்ணமாக—அரூப சொரூபமாகத் தூலத்தை விளைத்தல் வேண்டும். சத்தசைவான தீ சித்தசைவான தீ என்னும் இரண்டு தீயும் இவை சமரசமுற்று மாற்றமடைதலால் ஆக்க முற்ற மூன்றாவது தீயும் ஒருங்கு சேர்ந்து முத்தீ எனப் பேசப்படும். அமல அக்கினியை—அமல ஒளியை ஆக்கமுறச் செய்தற்கு ஏற்ற சாதகமே வாய்மையான முத்தீ வேட்டல் என்பது—அகத்தே முத்தீ வேட்டல் என்பது. அருமறை அந்தணர் முத்தீ வேட்டல் என்பதன் மறைபொருள் இதுவே என்க.

## திருமந்திரம்

ஆகுதி வேட்கு மருமறை யந்தணர்
போகதி நாடிப் புறங்குடித் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே.

பாழி யகலு மெரியுந் திரிபோலிட்
டேழி யகலு முறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி யுதிக்க வவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.

ஒண்சுட ரானை யுலப்பிலி நாதனை
யொண்சுடராகியென் னுள்ளத்திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே.

ஓமத்து ளங்கியி னுள்ளுள னெம்மிறை
யீமத்து ளங்கி யிரதங்கொள் வானுளன்
வேமத்து ளங்கி விளைவு வினைக்கடற்
கோமத்து ளங்கி குரைகட லூனே.

(ஷை 1-ம் தந். அக்கினி காரியம் செ. 2, 6, 8, 9.)

## சித்தாந்த சிகாமணி

அனைத்தினுமிலங்குபூரணவகந்தையாய்
மணிப்பொலிதருபரமானவங்கியில்
தனித்திடு கவி தநற்சமிதைவேள்வியான்
இனைப்பறுமகிலவோமத்தனென்பவே.

போதமென்றிடுமொராதாரப்பூந்தழற்
பேதமென்றுலகவிபெய்துவேட்பவன்
ஓதறுசகவலியுண்டுநின்றிடும்
ஏதமொன்றுறுதியர் ஞானயோகியே.

(ஷை சகபோசனத்தலம் செ. 6, 7,)

வாய்மையான முத்தீ வேட்டலால் கற்பூர வண்ணமாக விளைந்த அமல தநுவானது தன்னகத்துப் பூரணப் பட்ட அருட் சோதியால் கரைந்து பிரம சொரூபமாகிய சிதாகாசத்தில் கரைந்துவிடும் என்க. இயற்கை முறையான ஒடுக்கமுறை இதுவே என்க. இதுபற்றியே,

"எழுகின்ற தீயில் கற்பூரத்தை யொக்கப்
பொழிகின்றஇவ்வுடல் போம்அப்பரத்தே.
(திருமந்திரம்)

என்றனர் திருமூலர்.

"கற்பூர தீபம்போல் என்தன் உடலைக்
கனக சபையில் கலந்து கொள்வாயே"

என்றனர் முத்துத் தாண்டவர். [கனக சபை--பொன்னம்பலம்-ஞானாகாசம்.]

"கற்பூரதீபம் போலப் போய் ஒளிப்
பதல்லாது புலம் வேறின்றாம்"
எனத் தாயுமானவர் கூறியதும் அறிக.

"அப்பரும் லிங்கத்துற்றனர் என்றும்
ஆரூரர் வெண்கிரி ஏறினர் என்றும்
செப்பரியா திருஞான சம்பந்தர்
தேசுடன் சென்றார் என்றும்
இப்படி என்னை அலைத்து விடாதே.,,

எனச் சமய குரவர் மூவர் அடைந்த முத்தி நிலையைக் குறித்து முத்துத் தாண்டவர் இகழ்ச்சி தோன்றக் கூறினார் என்று அம் முத்துத் தாண்டவப் பெருமானைக் குறை கூறுவார் பலர். "என்றும்" "என்றும்" "என்றும்" எனப் பிறர் கூற்றாகக் கூறி அவர் அறியாமைக் கூற்றையே பொய்யெனக் குறிப்பாகக் காட்டி, உண்மை முத்தி இது என விளங்க வைத்த முத்துத் தாண்டவர் கூற்றை உற்று நோக்குவார்க்கு உண்மை இது எனப் புலப்படாததாகாது. அவர் இவ்வாறு கூற நேர்ந்ததன் காரணமும் உண்மையும் அமையம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

இவ்வாறு முத்தீ என்னும் முத்தி ஆக்க முறுதலால் வீடு பெற்றோர் சிவமாவரா? சிவாங்கமாவரா? இவற்றின் பொருள் என்னை? எனின், சிறிது கூறுதும்:—சிற்றறிவுடைய சீவன் நான் நீ அவன் என விவகரிப்பது இயற்கை. நான் என்று அகங்கரிப்பது ஆணவமலம். சீவனானது பாழ் கடந்து ஓ வடிவம் பெற்றபோது (சீவன் முத்தி நிலை பூரணப் பட்ட போது என்பது) நீ அவன் என விவகரித்த முன்னிலையைத் தன்னிலையில்

தானாகக் கண்டு மயக்க மற்று நிற்கின்றதன்றி எல்லாம் நான் என்ப தொன்று இல்லாமல் இருக்கவில்லை. அணுவாய் வியஷ்டியாய் இருந்த நான் என்பது சமஷ்டியாய்த் திரிந்து பெருந்தன்மையான நான் ஆனது. அசுத்தமாய் இருந்த நான் அமலமாய் திரிந்து பெருந்தன்மையான நான் ஆனது. அசுத்தமாய் அணுவாய் இருந்த சீவத்துவமாகிய நான் கெட்டுத் திரிந்ததையே "நான் கெட்டவா பாடி" என்றனர் மணிவாசகர் (திருவாசகம், திருத்தெள்ளேணம் செ. 18) பின்பு அந்த அமலமாகிய பெரிய நான் எத்துணை நிறை மக்கினமடைய வேண்டுமோ—மெலிவடைய வேண்டுமோ அத்துணை நிறை மக்கினமடைந்து செயலற்று இருந்தும் இல்லாததாய்ச் சிவத்துக்கு அங்கமாகித் திகழும் என்க. சிவாங்கமாகும் என்பதன் பொருள் இதுவே. "அசி" பதப் பொருள் இதுவே என்க. பின்வரும் பிரமாணமும் இவ் உண்மையை நன்று புலப்படுத்துகின்றது.

## சுத்தசாதகம்

இந்தநல்லொழுங்கின் மூன்னிருபதமு
மெய்தியிவ் 'அசி' பதத்தடைந்தால்
பந்தமில் சிவத்தை வடிவொடு மடையும்
பகுத்தவையொன்றிலொன்றொ துங்கிச்
சந்ததந்தருக்கி 'யசி' பதத்தருத்தந்தனைத்
தத்தம்பதத்தினிலொடுக்கும்
அந்தகர்தமக்குமற்றொருக்காலும்
"அசி" பதமுத்தியே கிடையா.

முத்தியிற்சிவமுமுயிரிரண்டாகின்
முத்திசாயுச்சியமின்றாம்
முத்தியிற்சிவமுமுயிருமொன்றாகின்
முத்தியேபெற்றவனின்றாம்
முத்தியிற்சிவத்துக்குயிரங்கமாயின்
மொழிந்தமற்றவையுண்டாமதனான்
முத்தியிற்சிவமுமுயிருஞ்சையோக
மொழியுந்தாதான்மியங்குறையே.

(ஷை செ. 26. 27).

செம்பானது பரிச குளிகையால் தன் களிம்பு நீங்கிப் பொன்னாவதுபோல சீவன் தன் பாசம் நீங்கிச் சிவமாகின்றது — சிவசமமாகின்றது என்பர் சிலர். செம்பானது குளிகையின் பரிசத்தால் சுத்தப்பட்டு அமலமாகிய பொன்னாகுமன்றி, தன்னைப் பரிசுத்தம் செய்தகுளிகையாகுமா? குளிகை ரூபமும் குணமும் அமலமடைந்த—பொன்னான செப்புக்கு உண்டாகுமா? ஆதலால் உயிர்சிவமாகும் என்பதன் பொருள் சிவாங்கமாதல் என்பதே என அறிதற் பாற்று.

மேலே கூறிய வாற்றால் "வீடு பெறநில்" என்பதில் வீடு என்பதன் இலக்கணமும் அதுவே முத்தி என்பதும் அதன் பொருளும் ஒருவாறு விளக்கப்பட்டன. மேல் அதனைப் பெறுதற்குரிய நெறியில் நிற்றல் என்பதன் பெற்றி ஒரு சிறிது சுருங்க உரைத்து இக்கட்டுரை முடிக்கப்படும்.

பலகோடி சென்ம நற்றவப் பயனால் ஆசான் தரிசனம் பெறும் பக்குவமடைந்த சீவன் அவ் ஆசான் அடியில் தன் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்து சடபேதம் கர்ம பேதங்களுக்கு ஏற்ப அவன் கருணையால் அருளும் வேதாகம கட்டங்களை வழுவறத்தாங்கி ஒழுகுவதில் அணுவளவும் தவறுதல் கூடாது. இப்பெற்றி கைவருதல் கஷ்டமே எனினும் மதிவைராக்கியம் எனும் கொழுகொம்பைப் பிடித்து முன்னிலைக் கோரணிகளால் உளவாகும் நன்மை தீமைகளில் மனம் பராக்குறாமல் அவனருளே துணையாகக்கொண்டு பணி செய்து கிடத்தல் வேண்டும். பணியில் வழுவாது இருத்தலே அவன்பால் அன்புடைமைக்கு உறு சான்றாகும். ஆசானே குருலிங்க சங்கமம் யாவுமாதலால் அவன் தரிசனப்பேற்றின் அருமையையும் முக்காலமுமுணர்ந்த அன்னவன் அருளும் விதிகளை வழுவறத்தாங்கி ஒழுகுதலால் உளவாகும் அளப்பரும் நன்மையையும் வாய்மையாக உணர்ந்து மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது அவனடித் தொண்டே ஆற்றுதல் வேண்டும். இப்பெற்றி வாய்ந்தவரே அன்னவன் கருணைக்கு இலக்காகி உய்தியடைய வல்லராவர்—வீடு பெற நிற்க வல்லவராவர். குருபணியில் தவறுதலால் உளவாகும் ஏதப்பாடு பலவாகும். அஃதே உய்தியில் குற்றமும் ஆம் என்க. பின்வரும் பிரமாணங்கள் இவ்வுண்மையை நன்று புலப்படுத்துவனவாகும்.

## திருவாசகம்

"..........................................
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
..........................................
கொடிறும் பேதையுங் கொண்டது விடா
[தெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பிற்
..........................................
மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே
..........................................
சாயா அன்பினை நாடொறுந் தழைப்
[பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
.........................................."

(ஷை போற்றித் திருவகவல்)

## சூதசங்கிதை

"பத்தியினிவ்வாறநுதினம்புரிவோன்
பகரணிமா முதலாய
சித்திகளெட்டும்வேண்டுமேற்பெறுவன்
செப்பிலெண்ணிறந்த பேரிதனான்
முத்தியை யடைந்தாரிதனைநன் குணர்ந்து
மூதறிவுடைக்குரவனுக்கு
மேத்தியவன்பினுவந்துபன்னாளும்
மிகுபணி விடைசெயல் வேண்டும்."

"குருபரனருளாலிதனைநன்கோர்ந்து
கோதின்மெய்ஞ்ஞானமுண்டாகி
மருவுறுசாதிமுதலியதொடர்பும்மறை
முதனூல்களின்தொடர்பும்
கருதுமற்றியாதுந்தனையறியாதுகழி
தருமாயினுங் குரவன்
மருமலர்ப்பாத சேவையினன்பு மாத்
[திரங்
கழிதல்கூடாதால்."

"சலந்தானுடலங்கீண்டசெஞ்சோதிச்
சக்கரமுக்கணெம்பெருமான்
கலந்தருபாதக்கலப்பினுக்கென்று
நாடுதற்கரியசாதனந்தான்
வலந்தருகுரவன்மலரடிக்கமைக்கு
மாண்புடைப்பத்தியேயாமென்
றலர்ந்தசெம்மறைநூலுரைத்திடு
மிதனுக் கையமொன்றில்லை
[யென்றுணர்வீர்."

(ஷை ஆன்ம மந்திரமுரைத்த அத்தியாயம்.
(செ 21, 22, 23)

குருவுருவாயிருந்துவிதிகொடுப்பானுங்
கொடுத்தவிதிகொண்டுபோற்றத்
தருவுருவாயெழுந்தசிவலிங்கபரனுமுளங்
தடுத்தாட் கொள்ள
அருவுருவாய் வந்ததொரு சங்கமனு
மோரிடத்தின்வைகக் கண்டும்
பெருநிலமேலீதறியார்விளக்கிருக்
கத்தீக்குழலும்பித்தராமால்

என்பது ஆன்றோர் வாக்கியம்.

## சித்தாந்த சிகாமணி

எனுறக்கதிவிழைபியல்பினேன்குரு
ஆணையைக்கடக்கொணுதலைதக்கடந்தி
[டிற்
காணுறச்சகமெலாங்காட்டுமீசன
தாணையைக்கடந்தவனுவனுணையே.

(ஷை உபயத்தலம் செ. 7)

சிறகுமுரிந்த பறவையானது தன்னிஷ்டமாகப்பறக்கமுடியாததுபோல தற்சுதந்தரத்தைக் குரவன்பால் சமர்ப்பித்து அவன் ஆணைவழி நின்று கர்மங்களை உஞற்றி இருவினையைச் சமஞ் செய்து வீடு பெறுதற்குரிய தடத்தை அடைய வேண்டும். அடைந்து அதன்பால் உறுதியோடு நின்று அவரோகணம் பெறாது ஆரோகணம் பெற்று உய்தி அடையவேண்டும்; வீடு பெற நிற்றலின் பெற்றி இதுவே என அறிதற்பாற்று. இப்பெற்றி கைகூடுதற்கண் மெய்யடியார் அடைந்த துன்பங்கள் அளவு படுவனவாகா. இவை "திருவருணட்டம்" "அடியார் பெருமை" என்னும் கட்டுரைகளில் ("வித்தகம்" இல. 8,28) விரித்துக் கூறப்பட்டன. ஆங்குக்காண்க. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் "வீடு பெறநில்" என்னும் ஔவை திருவாக்கின் உண்மைப் பொருள் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

# ஈழநாடும் தமிழும்

(45-ம் வாரத்தொடர்ச்சி)

## கார்த்திகேய ஐயர்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த வேங்கடாசல ஐயருக்குப் புத்திரர். இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கிய இலக்கணங்கள் நன்கு கற்றவர். தமிழிலுஞ் சம்ஸ்கிருதத்திலுமன்றி ஆங்கிலத்திலுஞ் சிறந்த அறிவுபடைத்தவர். வேதாந்த சித்தாந்த நூல்களுந் தேர்ந்தவர். இவர் வண்ணார் பண்ணையிலே வயித்தீசுர ஆலயத்திலும் பிறவிடங்களிலும் ஸ்ரீ. ல. ஸ்ரீ. ஆறுமுக நாவலரோடு பற்பல பிரசங்கங்கள் செய்தவர். இவர் காலமும் நாவலர் காலமும் ஒன்றாகும்.

## சம்பந்தப் புலவர்

இவர் யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்த வேலாயுத முதலியாருக்குப் புத்திரர். ஆறுமுக நாவலருக்கு நண்பர். இவர் முன் சேனாதிராய முதலியாரிடத்தும் பின் சரவண முத்துப் புலவரிடத்தும் இலக்கிய இலக்கணங்கள் கற்றவர். சமய நூல்களுந் தேர்ந்தவர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரும் புன்னாலைக் கட்டுவன் செந்திநாதையர் முதலியோரும் இவர்க்கு மாணவர்கள். இவர் கதிர்காம சுவாமி பேரிற் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

## கார்த்திகேயப்புலவர்

இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த காரைத் தீவிலே இருந்த முருகேசையர் என்பவருக்குப் புத்திரர். இவர் தமது தந்தையாரிடம் தமிழும் அவ்வூரிலிருந்த சுவாமிநாத தேசிகர் என்பவரிடம் சம்ஸ்கிருதமும் கற்று வந்தனர். பின் அவ்வூரிலிருந்த சண்முக ஆசிரியரிடம் சென்று இலக்கிய இலக்கணங்கள் கற்றுவந்தனர். இவருக்கு இளமையிலேயே பாடும் வல்லமையுமுளதாயிற்று. தமது தந்தையார் பாடிய தன்னையமக வந்தாதியின் குறையை இவரே பாடி நிரப்பினர். தந்தையார் பாடியன எழுபது செய்யுட்கள். ஒழிந்த முப்பது இவர் பாடியன. இவர் பாடிய செய்யுட்களுள் முதற் செய்யுளை ஈண்டுத் தருதும்:—

"மணிக்கோ கனகத் தருநிதி யாரும் வணங்கிடமா
மணிக்கோ கனகத் தருமாக வன்பர்க்கு வைப்பவனீ
மணிக்கோ கனகத் தருவகை யோடருண் மைந்தனன்கார்
மணிக்கோ கனகத் தரும்புகழ்த் தென்றென்னை மன்னவனே.

அக் காலத்திலே நெல் மதிப்பின் பொருட்டும் வேறு முயற்சிகளின் பொருட்டும் இருபாலைச் சேனாதிராய முதலியார் காரை தீவுக்கு செல்வது வழக்கம். சென்றால் இவர் வீட்டிலே பதினைந்து நாள் வரையில் விடுதி விடுவதும் வழக்கம். அப்பொழுது இராக்காலங்களிலே தமக்குச் சந்தேகமானவற்றை முதலியாரிடம் கேட்டு இவர் தெரிந்து கொள்வர். இவரது கல்வி விருப்பத்தையும் கூரிய புத்தியையும் கண்ட முதலியாரவர்கள் இவரைத் தம்மூருக்கழைத்துக்கொண்டு போய் அங்கே பலகாலம் இருத்தி அரும் பெரும் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வைத்தனர். அதனால் இவரும் பெரும் புலவராய் விளங்கினர். பின் இவர் தம்மூரிலே ஒரு வித்தியாசாலை தாபித்து தாமே ஆசிரியராகவிருந்து கற்பித்து பலரைத் தமிழிற் றேர்ச்சி பெறச்செய்தனர். இவருடைய புதல்வர்களும் இவரிடமே கற்றார்கள். இவர்களுள் சிவசிதம்பரஐயர் கந்தபுராணத்து மகேந்திர காண்டத்துக்குச் சிறப்பு வாய்ந்த ஒருரை எழுதியுள்ளார்.

இன்னும் இவர் சண்டிலிப்பாயிலிருந்த கார்த்திகேயக் குருக்களிடம் சுத்த வாதுளம் மிருகேந்திரம் முதலிய ஆகமங்களைக் கேட்டு அவ்வாகம நூலறிவினுஞ் சிறந்தவராய் விளங்கினார்.

மேலும் இவர் சிதம்பர தலஞ் சென்று அங்கே சிலகாலம் வசித்த பொழுது திருத்தில்லைப்பல்சந்த மாலை என்று ஒரு பிரபந்தம் பாடினார். அன்றியும் யாழ்ப்பாணத்திலே நடந்த இலங்கை நேசன், உதயபானு, விஞ்ஞானவர்த்தனி என்னும் பத்திரிகை கண்மீது தனித்தனி சிறப்பு கவிகளும் பாடியுள்ளார். அவற்றுள்,—உதயபானுப் பத்திரிகை மேற் பாடிய சிறப்புக் கவியை ஈண்டுத்தருதும்:—

தாரகைகண் மறையத்துண் மதிசாய்க் தோடத்
தடுத்தெதிர்வஞ்சரையழித்துத்தங்குமந்த
காரவிரு ளினையோட்டி வெளிய தாக்கிச்
சந்தேக மன்றியுறு பொருளை யாரு
மோரவே தெரிந்துண்மை யினையுணர்த்தி
யுலக மெங்குஞ் சென்றெவரு முவந்து போற்ற
சேருதய பானுவினை யவனி மீதிற்
றிகழுதய பானுவெனச் செப்பலாமே.

விஞ்ஞான வர்த்தனி என்னும் பத்திரிகை மேற்பாடிய சிறப்புக் கவியையும் ஈண்டுத் தருதும்:—

மயக்கந்தீ ராகமநூல் யாவும் பார்த்து
மனமதனைப் புலன்வழிசெல் லாமற் பேர்த்துத்
தயக்கரிய மார்க்கவிரு டன்னைத் தீர்த்துச்
சற்சனருக் கிடுக்கணுறு தருளைக் கூர்த்துப்
பயக்கவருமரன் புகழைச் சொல்லியார்த்துப்
பாங்கான முத்திவழி யதனிற் சேர்த்து
வியக்கவுறு மெய்ஞ்ஞானி தனைப்போற் பாரின்
மெய்ஞ்ஞான வர்த்தினியு மேவிற் றன்றே.

ஒருமுறை இவரும் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது பிள்ளையவர்கள் இவரின் கவிபாடும் வன்மையைச் சோதிக்க விரும்பிப் போலும், 'கற்றைச்சடையுடைத்தேவே கயிலைக் கறைக்கண்டனே' என்னும் இறுதியடியைக் கொடுத்து முன் மூன்றடியையும்பாடிநிரப்புமாறு சொற்றனர். இவரும் அதற்குடன்பட்டு, முன் மூன்றடிகளையும் இயற்றி அக்கலித்துறையை நிரப்பினர். அக்கலித்துறைச் செய்யுள் வருமாறு:—

"எற்றைக்கு முன்னடி பேணும்வரமே யெனக் கருள்வை
பற்றைக் களைந்திடு ஞானிகள் போற்றும் பழம் பொருளே
பெற்ற மூகைத்திடு மங்கையொர் பங்க பிறையுலவுங்
கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக் கறைக் கண்டனே."

என்பது.

இத்தகைய புலவர் தேக வியோகமடைந்தபோது இவர் தேகவியோகத்தைக் குறித்துச் சி. வை. தாமோதரம் பிள்ளையும் திருமயிலை வித்துவான், சண்முகம் பிள்ளை முதலாயினோரும் பல கவிகள் பாடியுள்ளார்கள்.

(தொடரும்)


## பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.

2-வது " " " 4.

3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்
புதுவை.

## "வித்தகம்"

வருடசந்தா

முன்பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர் சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## "வித்தகம்"

விளம்பர விகிதம்

வியாபார விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 0—8—0

கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்,
புதுச்சேரி.


## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.


சுத்தசாதகம் விலை அணா 2.

திருவாசக உண்மை விலை அணா 2.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.


Sandhanam Printing Works, Pondicherry, Le Gérant R. Nagarattinam.